

துணிவில்லாத அதிகாரிகளால் நீதிமன்றத்தில் குவியும் வழக்குகள்

இந்தக் கட்டுரை ஒட்டுமொத்தமாக அரசு உயர் அதிகாரி களைக் குற்றம் சொல்லும் நோக்கத்தில் எழுதப்பட்டது அல்ல. பல அதிகாரிகளின் திறமையான செயல்பாட்டால்தான் அரசு இயங்கிக்கொண்டிருக்கிறது, பல்வேறு நலத்திட்டங்களின் பலன் சாதாரண மக்களைச் சென்று அடைகிறது என்பதிலும், அரசு, (ஆளுகின்ற கட்சித் தலைமை) அந்த வகையில் தங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அதிகாரிகளைத்தான் முக்கியப் பொறுப்பில் அமர்த்துகிறார்கள் என்பதிலும் சந்தேகமில்லை. எதிரணியில் இருப்பவர்கள் அதற்கு வேறுவிதமாகக் காரணம் கற்பித்துக்கொண்டிருந்தாலும், ஆளுகின்ற அரசுக்கு (கட்சிக்கு அல்ல) விசுவாசமாக இருப்பதுதான் அதிகாரிகளின் கடமை. மக்களாட்சியில் அதிகாரிகள் அரசுக்குக் காட்டுகின்ற விசுவாசம் அதனைத் தேர்ந்தெடுத்த மக்களுக்குக் காட்டும் விசுவாசம் என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு சில திறமையற்ற, நேர்மையற்ற, அனுபவமற்ற அதிகாரிகள்தான் ஆளுகின்ற அரசுக்குக் களங்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருப்பவர்கள். இவர்கள் விரைவாகவும், துணிந்தும் முடிவெடுக்கும் திறமையற்றவர்கள். இவர்களுக்கு எந்த முடிவெடுப்பதற்கும், ஒரு செயலைச் செய்வதற்கும் அச்சம். ஏதாவது சிக்கலில் மாட்டிக்கொள்வோமோ என்ற பயம். இருக்கிற பதவியில், கீழ் உள்ளவர்களின் தயவில் அவர்கள் செய்வதற்கெல்லாம் தலையை ஆட்டிக்கொண்டு காலத்தைத் தள்ளிக்கொண்டிருப்பவர்கள். இவர்கள் காலத்தில், இவர்கீழ்

பணியாற்றுபவர்கள் தங்கள் மனம்போனபோக்கில் வேலை பார்த்து வாழ்க்கையை அனுபவித்துக்கொண்டிருப்பார்கள். கடமையைச் செய்து மக்களின் நன்மதிப்பைப் பெறவேண்டும் என்ற எண்ணத்திலிருக்கும் சக நல்ல அதிகாரிகள் மனதளவில் புழுங்கிக் கொண்டிருப்பார்கள்.

கப்பல் துறைமுகத்திலேயே நங்கூரமிட்டிருப்பது அதன் பாதுகாப்புக்கு உகந்ததுதான் ஆனால், அது உருவாக்கப்பட்டதன் நோக்கம் அதுவல்ல.

ஆங்கிலத்தில் ஒரு அருமையான சொற்றொடர் உண்டு. அது பலருக்குப் பரிச்சயம் இல்லாத ஒரு வார்த்தை ஆனால், நிர்வாக இயலைப்பற்றியும், தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களிடம் காணப்படவேண்டிய பண்புகளைப்பற்றியும் சொற்பொழிவாற்றும் எந்தப் பேச்சாளரும் இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்தாமல் இருக்கமுடியாது அதுதான், 'Courage of Conviction.'

சாதாரணமாக ஒரு பொறுப்பில் அல்லது அதிகாரத்தில் உள்ளவர்களோ, அல்லது அரசின் சட்டத்தை அமல்படுத்தும் இடத்தில் உள்ளவர்களோ, தங்களின் கடமையைச் செய்யும் போது, நாம் செய்வது, சட்டப்படி மட்டுமல்லாது நியாயப் படியும் சரியா? நாம் இதைச் செய்வதற்கு, சட்டத்தில் நம் பதவிக்கு உள்ள அதிகாரவரம்பு என்ன? என்பது குறித்து நன்கு தெரிந்து வைத்திருக்கவேண்டும்.

அல்லது அதுபோன்றதொரு சூழ்நிலை வரும்போது, உரியவர்களிடம், நல்ல அனுபவமிக்க, தான் வகித்துவரும் பதவியில் வெற்றிகரமாகப் பணியாற்றிப் புகழோடு சென்றவர் களிடம் தொடர்ந்து தொடர்பு வைத்துக்கொண்டு கேட்டுச் செயல் படவேண்டும்.

நாம் செய்யும் செயல்குறித்து நாம் மிகத்தெளிவாக இருக்கும்போது நமக்கு ஏற்படும் ஒரு துணிவுதான் 'Courage of Conviction.' வலிமையான, தெளிவான நம்பிக்கையின் காரணமாக ஏற்படுகிற துணிவு. மனதில் அந்தத் துணிவு இருந்தால் செய்கின்ற செயலில் தயக்கம் ஏற்படாது. தயக்கத் தோடு செய்யும் செயலில் முழுமை இருக்காது. முழுமையற்ற ஒரு செயலால் யாரையும் திருப்திப்படுத்த முடியாது. யாருக்கும் திருப்தியற்ற சூழ்நிலையில் பணியாற்றுபவர்கள் அந்தப் பணியில்,

திறமையானவர் என்று பெயரெடுக்கவும் முடியாது, நிலைத் திருக்கவும் முடியாது. அந்த இடத்தில் அவர் ஒரு வீண் பாரம்.

இப்படித்தான் இன்று அரசின் பல முக்கியப் பொறுப்பில் அமர்ந்திருப்பவர்கள் தங்கள் கடமையில் தூங்கி, புகழை இழந்து கொண்டிருக்கிறார்கள். எதைச் செய்வதற்கும் இவர்களிடம் துணிவில்லை.

மக்களுக்காகத்தான் சட்டமே தவிர, சட்டத்துக்காக மக்கள் இல்லை.

நாம் அனுபவிக்கும் சுதந்திரத்தின் பயன் எல்லோருக்கும் சமமாகக் கிடைக்கவேண்டும் என்பதற்காக ஏற்பட்டதுதான் சட்டம். அந்தச் சட்டத்தைக் காரணமாகக் காட்டி தனி மனித சுதந்திரத்தைப் பறிப்பதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. அதைத்தான் ஒரு சில அதிகாரிகள் தெரிந்தே சுயலாபத்துக் காகவும், சொந்த விருப்பு வெறுப்புக்காகவும் செய்துகொண்டிருக் கிறார்கள். ஒரு சிலர் தங்கள் அறியாமையால் செய்துகொண் டிருக்கிறார்கள். இதனால் பல அப்பாவி அலுவலர்களும், பொதுமக்களும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்

சாமானியர்களைவிட மிக அதிக நேரத்தைச் செலவிட்டு, மிக அதிகமாகப் படித்து அகில இந்திய அளவில் தேர்வு எழுதி வெற்றிபெற்று வந்தவர்களில் சிலர் இங்கு பணியில் இருக்கும் போது, அந்தச் சாமானியர்கள் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்யக்கோரிக் கொடுக்கும் மனுக்களைப் படிக்குமளவுக்கு பொறுமை இருப்பதில்லை. 'தக்க நடவடிக்கை எடுக்கவும்' என்று மேற்குறிப்பு செய்யும் - அதுவும் தன்னுடைய அலுவலக உதவியாளர் எழுதிவைத்ததில் கையொப்பமிடும் - அந்த அதிகாரி அந்த 'தக்க நடவடிக்கை' என்னவென்று சுருக்கமாகக் கோடிட்டுக் காட்டுவதுகூட இல்லை. மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள புகார்களில் தன்னுடைய கவனத்துக்கு வந்த முக்கிய பகுதி எது? அந்தப் பகுதிக்கான விடை விசாரணை அறிக்கையில் இடம்பெற வேண்டும் என்று குறிப்பாக உணர்த்துவதுமில்லை.

இது போன்றதொரு மேற்குறிப்புடன் உயர் அதிகாரி யிடமிருந்து வரும் மனு மீது எந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்குமிடத்தில் இருக்கும் அதிகாரி முக்கியத்துவம் கொடுப்பார் என்று நமக்குத் தெரியாததல்ல. இப்படியொரு மேற்குறிப்பு

செய்த அதிகாரியின் அலுவலக அறையைப் பார்த்தால் மிகப் பிரபல, தமிழ் மற்றும் ஆங்கில எழுத்தாளர்கள் எழுதிய மிகத் தடிமனான புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும், ஒன்று அவர் கையிலும் இருக்கும்.

கீழ்மட்டத்தில் நடவடிக்கை எடுக்காமல் அலட்சியம் காட்டுகிறார்கள் அல்லது பல்வேறு காரணங்களால் பாரபட்ச மாக நடவடிக்கை எடுக்கிறார்கள் என்று உயரதிகாரிகளை அணுகும் ஒரு சாதாரணக் குடிமகனின் மனு, பரமபத விளையாட்டில் பாம்பிடம் கடிபட்ட காய்போல அலட்சியம் காட்டிய அதிகாரியிடமே வந்து சேர்ந்து அதை வைத்துக் கொண்டு அந்த அதிகாரி, "பார்த்தியா நீ கொடுத்த மனு, நீ எங்க போய் கொடுத்தாலும் அது எங்கிட்டேதான் வரும். நான் தான் நடவடிக்கை எடுக்கணும்" என்று மனு கொடுத்தவரை ஏளனமாகப் பார்க்கும் நிலைதான் இதுபோன்ற அதிகாரிகளின் தலைமையில் இயங்கும் பல அரசு அலுவலகங்களில் தற்போது நிலவிவருகிறது.

இத்தனைக்கும் இந்த அதிகாரிகள் எல்லோருமே நேர்மை யற்றவர்கள், கையூட்டு பெற்றுக்கொண்டு கீழ்மட்ட அலுவலர் களைக் கண்டுகொள்வதில்லையென்று சொல்லிவிட முடியாது. தங்களுடைய கவனக்குறைவால் தங்களுக்குத் தெரியாமல் எத்தனைபேர் என்னென்ன விதத்தில் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று இவர்கள் அறியாமல் இருக் கிறார்கள்.

'நல்லவர்கள் ஆனால் வல்லவர்கள் இல்லை' என்ற மக்களின் விமரிசனத்துக்கு ஆளானவர்கள்.

சமூகத்தில் தாதாக்கள் உருவாவதுபோல் இதுபோன்ற அதிகாரிகளின் தலைமையின்கீழ் சில தாதாக்கள் உருவாகி கோலோச்சிக்கொண்டிருப்பார்கள். அவர்களுக்குப் பயந்து அப்பாவி ஊழியர்கள் அடிமைகள்போல் வேலை செய்து கொண்டிருப்பார்கள். பணிய மறுப்பவர்கள் பழிவாங்கப் படுவார்கள்.

அப்படி பழிவாங்கப்பட்டு தண்டிக்கப்பட்டவர்கள், பதவி உயர்வு மறுக்கப்பட்டவர்கள், நீதிமன்றத்திற்கு ஓடிக்கொண் டிருப்பார்கள்.

பொதுமக்களில் பலர் தங்களின் சின்னச் சின்ன பிரச்சினைகளுக்கும், அரசு அலுவலர்கள் தங்களின் மீது அதிகாரிகளால் எடுக்கப்பட்ட தவறான நடவடிக்கைக்காகவும், உரிய காலத்தில் கிடைக்காத பதவி உயர்வுக்காகவும் நீதிமன்றத்துக்கு ஓட வேண்டிய கட்டாயத்தை உருவாக்குவது இதுபோன்ற திறமையற்ற, பொறுப்பற்ற அதிகாரிகள்தான்.

உதாரணமாக ஒரு வயதான அம்மாள் தனக்குச் சொந்தமான ஒரே சொத்தாக இருக்கிற வீட்டின் ஒரு பகுதியை வாடகைகு விட்டு அந்தத் தொகையை வைத்து சாப்பிட்டுக் கொண்டிருக் கிறார். அந்த வீட்டில் வேண்டுமென்றே தவறான நோக்கத்துடன் வந்து ஏமாற்றிக் குடிவந்த ஒருவர் ஒன்றிரண்டு மாதம் கழித்து வாடகையைக் கொடுக்காமல் அந்த அம்மாவை மிரட்டுகிறார். அந்த அம்மாள் காவல் நிலையத்தில் வந்து புகார் கொடுத்தால் 'இது சிவில் பிரச்சினை; நீதிமன்றத்துக்கு போங்கள்' என்று சொல்லும் காவல் துறை அதிகாரியவிட அந்த அடாவடி நபரை எச்சரித்துக் காலிசெய்ய வைக்கும் அதிகாரிதான் துணிச்சல் மிக்கவர். அது அதிகார அத்துமீறல் ஆகாது. ஆனால் அந்தச் செயலில் சிறிதும் வன்முறையோ, சுயலாபமோ, கூடாது. திறமைமிக்க அதிகாரிக்கு அது சாத்தியமே.

இப்போதெல்லாம் சில அதிகாரிகளே 'கோர்ட்டுக்கு போய் உத்தரவு வாங்கி வாருங்கள்' என்று தங்கள் பொறுப்பைத் தட்டிக்கழிப்பதும், அப்படிப்போய் வாங்கிவந்தாலும் தங்கள் துறை சட்ட ஆலோசகரிடம் கருத்துரை பெறவேண்டும் என்ற சாக்கில் நாளைக் கடத்தி, எதிர்தரப்பினர் அதற்கு மாற்று உத்தரவு வாங்க ஆலோசனையும், வாய்ப்பும் வழங்குவதும் வாடிக்கையாக உள்ளது.

இதனால் நீதிமன்றங்களில் வழக்குகள் நிரம்பிவழிகின்றது. வாய்தா தேதி தெரிந்துகொள்ளவே நிறையப்பேர் நீதிமன்றத்தில் கூட்டம் சேர்ந்து அங்கு சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டு கடுமையான பாதுகாப்பு போடவேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது. போலி வழக்கறிஞர்கள் சிலர் நீதிமன்றத்தைவிட்டு அரசு அலுவலகங்களிலும் அதிலும் குறிப்பாகக் காவல் நிலையத்திலும் பிரச்சினைக்கு உரிய இடத்திலும் நேரடியாக வந்து மோத ஆரம்பித்துவிட்டார்கள். அதனால் மிக மோசமாக கொலையாகும் அளவுக்கு பாதிக்கப்பட்டும் இருக்கிறார்கள்.

இதில் பல நல்ல, மூத்த வழக்கறிஞர்களுக்கு உடன்பாடு இல்லை என்பது மட்டுமல்ல மன வருத்தத்தையும் கொடுத்திருக்கிறது.

முன்பெல்லாம் வழக்கறிஞர்கள் நீதிமன்றத்துக்கு வெளியே வந்து கட்சிக்காரரை சந்திப்பதையும் அவர்களுக்காக காவல் நிலையம், மற்றும் அரசு அலுவலகங்களுக்குச் செல்வதையும் விரும்பமாட்டார்கள். தங்கள் தொழிலுக்கு இழுக்கு என்று நினைப்பார்கள். ஆனால், இன்று காலத்தின் கட்டாயமாக இளம் வழக்கறிஞர்கள் அரசு அதிகாரிகளைச் சென்று சந்திக் கிறார்கள். சட்டம் தெரியாத கட்டப்பஞ்சாயத்து ஆசாமிகளை விட, வழக்கறிஞர்கள் தலையிடுவதில் தவறில்லை அணுகுமுறை சரியாக இருக்கும்வரை. உண்மையில் வழக்கறிஞர்களும் அரசு அதிகாரிகளும் சுயநலம் மட்டுமே இல்லாமல் சமூகப் பொறுப்போடு நடந்துகொண்டால் கோர்ட்டுக்குப் போகா மலேயே பல பிரச்சினைகள் சுமுகமாகவும் ஏழை எளியவர் களுக்கு வீண் செலவு இல்லாமல் நீதி கிடைக்கச் செய்யமுடியும். பல சிறிய பிரச்சினைகள் திறமையற்ற அதிகாரிகளாலும், பொறுப்பற்ற, லாப நோக்கத்தோடு செயல்படுகின்ற போலி வழக்கறிஞர்களாலும் பெரிதாக்கப்படுகிறது என்பது மறுக்க முடியாத உண்மை.



அகங்காரத்தைத் தொடரும் அவமானங்கள்

"என்னைவிட உயர்ந்தவன் என்று அவனுக்கு நினைப்பு. உண்மையிலேயே அவன் என்னைவிட உயர்ந்தவன்தான். அந்த நினைப்பு அவனுக்கு வரும்வரை" என்றார் ஒரு அறிஞர்.

'ஆணவம் முன்னால் போகிறதா! அவமானம் பின்னால் வந்துகொண்டிருக்கிறது' என்கிறது ஒரு பழமொழி.

ஒரு மிகப்பெரிய நிறுவனத்தை மிகச் சிறப்பாக நிருவகித்து வெற்றிகண்ட ஒரு பிரபல நிர்வாகி குறிப்பிடுகிறார், "பல நிறுவனங்கள் வீழ்ச்சியடைவதற்கு காரணம், அவர்களைச் சுற்றியிருப்பவர்கள் பாடும் துதிகளை மட்டுமே அனுமதித்து, குறைகளைச் சுட்டிக்காட்டும் துணிவுமிக்க உண்மையானவர் களைப் புறம் தள்ளிவிடுவதால் தான்" என்று.

இது, பல வேலையாட்களைக் கொண்டிருக்கின்ற தலைமை நிர்வாகிக்கும், பல தொண்டர்களைக் கொண்டிருக்கின்ற கட்சித் தலைவருக்கும் பொருந்தும்.

மிகச் சிறந்த நூலறிவும் அனுபவ அறிவும்கொண்ட சில அரசியல் தலைவர்கள் கூடத் தன்னுடைய தவறுகளையும் பலவீனத்தையும் சுட்டிக்காட்டும் தொண்டனை விரும்புவது மில்லை, சுட்டிக்காட்ட அனுமதிப்பதுமில்லை. தொண்டர்களும், தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக, துதிபாடுவதை மிக அக்கறையோடு வேண்டுமளவுக்குச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

தலைவர்களின் வருகைக்காகவும், நட்சந்திரங்களின் பட வெளியீட்டுக்காகவும் வைக்கப்படும் விளம்பரப் பதாகைகள், பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக மட்டுமின்றி மரண விபத்துக்களுக்கும் காரணமாக இருக்கிறது என்பதால் நீதிமன்றம் முடிவுசெய்த பிறகும், டிராஃபிக் ராமசாமி என்ற பெரியவர் மிகக் கடுமையான போராட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கும்போதும், அது வேண்டாம் என்று சொல்ல எந்த தலைவருக்கும், நடிகருக்கும் மனம் வரவில்லை. எனவே அவர்கள் பதாகைகள் வைப்பதை வரவேற்று, ஏற்றுக்கொண்டி ருக்கிறார்கள் என்றுதான் தோன்றுகிறது.

மன்னன் ஒருவன் தன் படையெடுப்புகள் அனைத்திலும் தோல்விகண்டு, தனித்து விடப்பட்டு, காட்டிலேயே சுற்றித் திரிந்து கொண்டிருந்தான். ஒரு நாள், பசி மிகுதியால் சோர்ந்து போயிருந்தவனுக்கு, ஒரு குடிசை தென்பட்டது. அங்கு சென்று பார்த்தபோது ஒரு வயதான கிழவி தன் அன்றைய உணவுக்காகக் 'களி' தயார் செய்துகொண்டிருந்தாள். பசி என்று வந்த மன்னனுக்கு சூடான களியை ஒரு வட்டியில் இட்டு அவன் முன் வைத்தாள். மன்னன் பசிவேகத்தில் களியின் நடுப்பகுதியில் கையைவைத்து விரலைச் சுட்டுக்கொண்டு, 'ஆ!' என்றுசொல்லி கையை உதறினான். சிரித்துக்கொண்டே கிழவி சொன்னாள், "எங்க ஊர் ராஜா மாதிரி, நீ சரியான முட்டாளா இருக்கியே" என்று.

மன்னனுக்கு தூக்கிவாரிப்போட்டது. 'தன்னை யாரென்றே தெரியாமல் முட்டாள் எங்கிறாளே இந்தக் கிழவி' என்று.

கிழவி சொன்னாள், "எங்கநாட்டு ராஜா ஒவ்வொரு முறை படையெடுக்கும்போதும் நேரடியாக தலைநகரத்தைச் சென்று தாக்கிவிட்டு அங்கு குவித்து வைக்கப்பட்டிருக்கிற படைகளிடம் தோற்றுத் திரும்புகிறான். எல்லைப் பகுதியில் போரிட்டால், தலைநகரிலிருந்து படைபலம் வந்து சேருவதற்குள் இருக்கிற படைகளை அழித்து முன்னேறலாம் என்ற யுக்தி அவனுக்கு புலப்படவில்லை" என்று. அப்போதுதான் மன்னனுக்குப் புரிந்தது அவனது முட்டாள்தனம்.

ஒரு நாட்டின் மன்னனுக்கு மந்திரி முதல் படைக்கலப் பொறுப்பேற்று நடத்தும் தளபதிகள் வரை ஆலோசனை கூறப் பல பேர் இருப்பார்கள். ஆனால், அந்த ஆலோசனைகளுக்கு

மதிப்புக்கொடுத்துக் கேட்டுப் பின்பற்றும் மனப்பாங்கு அவனுக்கு இல்லாமல் போனதுதான் அவனது தோல்விக்குக் காரணம்.

மன்னனுக்குப் பிடித்தவற்றையே சொல்லித் துதிபாடி, அவரை மகிழ்வித்து சுயலாபம் அடைந்து பழகிவிட்ட அவர் களுக்கும் உண்மையைத் துணிந்து சொல்லும் ஆற்றல் வேண்டும். அதனை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் மன்னனுக்கும் வேண்டும்.

இப்போது புகழின் உச்சியில் இருந்து ஆட்சி செலுத்துபவர் களில் சிலர் இறுதிக் காலத்தில் ஊழல் புகார்களில் சிக்கிச் சிறைச் சாலைகளைச் சென்றடைவதற்கு காரணம், எதிரணி யினரின், சூழ்ச்சி, பழிவாங்கும் நடவடிக்கை என்று பத்திரிக்கை களுக்கும், தொலைக்காட்சி ஊடகங்களுக்கும், அப்பாவி மக்களிடமும் சொல்லலாம். ஆனால், ஆதாரத்தோடு நடவடிக்கை எடுக்கும் விசாரணை முகமைக்கும், நீதி மன்றத்துக்கும்தான் தெரியும் உண்மை என்னவென்று.

போதுமான அடிப்படை ஆதாரமில்லாமல் நீதிமன்றம் எந்தத் தீர்ப்பையும் அளிப்பதற்கு வாய்ப்பேயில்லை. காவல்துறை யின் காவலில் அனுப்புவதானாலும், நீதிமன்றக்காவலில் வைப்ப தற்கும், பிணையில் விடுவிப்பதற்கும் நீதிமன்றத்தின்முன் பார்வைக்கு வைக்கப்படும் ஆவணங்கள்தான் ஆதாரம். பல சமயங்களில் அது இரகசியமாக இருக்க வாய்ப்ப்புண்டு. விசாரணை முகமையின் வழக்கு நாட்குறிப்பைப் பார்வையிட்டு முடிவெடுக்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு மட்டுமே உள்ளது. அந்த விவரங்களை வெளியிட்டால் வழக்கு விசாரணை பாதிக்கும் என்று விசாரணைமுகமை தெரிவித்து, நீதிமன்றம் அதனை ஏற்றுக்கொண்டால், வெளியிடாமல் இரகசியம் காக்கலாம்.

எனவே ஆதாரங்கள் வெளிவரவில்லை என்ற துணிவில் சம்பந்தப்பட்டவர், 'அரசியல் காழ்ப்புணர்ச்சி' என்று குரல் கொடுப்பதும், அவரின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்து தங்களின் விசுவாசத்தை வெளிப்படுத்துவதும் சமுதாயத்தில் சம்பிரதாய நிகழ்வுகளாகிவிட்டது.

இருட்டில் செல்பவன் பாடுகின்ற பாட்டு சங்கீத ஞானத்தின் வெளிப்பாடல்ல. அவனுள் ஒளிந்திருக்கும் பயத்தின் வெளிப்பாடு.

ஒரு தவறை செய்யுமுன் அதனால் தான் அடையப் போகும் ஆதாயம் மட்டுமே அவர்களின் கண்முன் நிற்கின்றது அது வெளிப்படும்போது ஏற்படப்போகும் அவமானம் அவர்களின் புத்திக்கு எட்டுவது இல்லை. அடுத்தவர்கள் சொன்னால் காதில் விழுவதுமில்லை. பெரும்பாலான சமயங் களில் தங்களின் தவறுகளை ஆமோதிப்பவர்களையே தங்களின் அருகாமையில் வைத்துக்கொள்கிறார்கள்.

மத்திய அரசோ, மாநில அரசோ ஒரு குறிப்பிட்ட துறையின் அமைச்சர் பொறுப்பில் இருப்பவர்களுக்கு தக்க ஆலோசனைகள் வழங்குவதற்கென்றே நியமிக்கப்பட்டிருக்கும் அரசு செயலாளர்கள், மிக உயர்ந்த கல்வித் தகுதியும், பொது அறிவும் மிக்கவர்களாகக் கருதப்படும் இந்திய ஆட்சிப்பணி மற்றும் காவல் பணி அதிகாரிகள்தான். அவர்களின் ஆலோசனைப்படி செயல்படுவதுதான் அமைச்சர்களுக்கு நல்ல பெயரையும் புகழையும் ஈட்டுத்தரும்.

தங்களைச் சுற்றி ஒரு வலிமையான வட்டத்தை இட்டுக் கொண்டு அந்த வளையத்தினுள் தனக்கு வேண்டியவர் களுடனேயே வலம் வந்துகொண்டிருப்பவர்களுக்கு அந்த வட்டத்தைத் தாண்டி நடக்கும் விஷயங்கள் தெரிவதில்லை. தங்களை நம்பிக்கொண்டிருக்கும் மக்களின் எதிர்பார்ப்பு எந்த அளவுக்கு நிறைவேற்றப் படுகிறது, அவர்கள் திருப்தியுடனிருக் கிறார்களா? அதிருப்தியுடன் இருக்கிறார்களா? என்று சிந்திப்பதில்லை.

எதிரணியில் இருப்பவர்கள் மக்களின் அதிருப்தியைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வார்கள் என்று அவர்களுக்குத் தோன்றுவதில்லை.

மக்களின் தேவையையும், எதிர்பார்ப்பையும் அமைச்சர் களுக்கு எடுத்துச்சொல்லி அதனை நிறைவேற்றுவதன் மூலம் அம் மக்களின் நன் மதிப்பைப் பெற வழி ஏற்படுத்தித்தரும் அரிய பொறுப்பு அதிகாரிகளிடம்தான் இருக்கிறது.

அமைச்சரின் மதிப்பைப்பெற்று தன்னுடைய பதவியைத் தக்கவைத்துக்கொள்வதும், தன்னுடைய வாழ்க்கையை வளமாக்கிக்கொள்ள பணத்தைச் சேர்த்துக்கொள்வதும் அந்த அதிகாரியின் நோக்கமாக இருக்கும்பட்சத்தில் அவரிடமிருந்து

நியாயமான ஆலோசனை அமைச்சருக்குக் கிடைக்காது என்பது மட்டுமல்ல, அத்தகைய அதிகாரிகள், அந்த அமைச்சரைத் தவிர வேறு யாரையும் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டார்கள். ஆணவமும், அகங்காரமும் அந்த அதிகாரியின் மனதை முற்றிலு மாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும்.

அத்தகைய அதிகாரிகள்தான் அமைச்சரை ஊழல் புகாரில் சிக்கவைத்துத் தாங்களும் சிக்கிக்கொண்டு அவமானத்தைச் சந்திக்கிறார்கள்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கும் ஒரு சில நேர்மையான அதிகாரிகள் மக்களுக்கு காணக்கிடைக்காத பொக்கிஷமாகத் தெரிகிறார்கள். அவர்களை அவதாரப் புருஷர்களாக தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடுகிறார்கள்.

ஆனால் இதைப் பார்த்த பிறகுகூட மற்ற அதிகாரிகள் தங்களின் நிலைகுறித்து வெட்கப்படுவதுமில்லை, அந்த நல்ல அதிகாரிகளின் இடத்தைப் பிடிக்க முயல்வதுமில்லை.

இராமாயணத்தில் இராமர் வாலி மீது யுத்த தர்மத்துக்கு மாறாக மறைந்திருந்து அம்பு எய்தபோது அந்த அம்பு 'இராமரா இந்த தவறைச் செய்கிறார்' என்ற சந்தேகத்தில் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே, தயங்கித் தயங்கிச் சென்றதால் வழக்கமாக ஒரு இராம பாணத்துக்கு உரிய வேகமும், சக்தியும் அதனிடமில்லாமல் போனது. அதனால் அந்த அம்பு வாலியின் உடலைத் துளைத்துக்கொண்டு செல்லாமல் உடலிலேயே நின்று விட்டதாம்.

அத்தகைய தயக்கம் நம் அரசியல்வாதிகளுக்கும் அதிகாரி களுக்கும் ஊழலைப்பற்றிய எண்ணம் மனதில் உதிக்கும்போதே ஏற்படவேண்டும். சிந்திக்காமல் செயல்பட்டுவிட்டுப் பின்னால் ஏகப்பட்ட நீதிமன்றங்களில் முன் ஜாமின் பெற முயற்சித்துக் கொண்டிருக்கக் கூடாது.

நாம் செய்வது சட்டப்படியும் நியாயப்படியும் தவறில்லை மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியது என்று தெரியும்போது கொஞ்சமும் தயக்கமில்லாமல் துணிவுடன் சுயமாக முடிவெடுத்துச் செயல்படவேண்டும்.

சில நேர்மையான அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் எதிலுமே தங்களை ஈடுபடுத்திக்கொள்ள மாட்டார்கள். அவர்களால் அன்றாடப் பணிகள் பெயரளவில் நடந்துகொண்டிருக்கும். நியாயமானவற்றைக்கூடச் செய்வதற்கு பயப்படுவார்கள். அவர்கள் நேர்மையாக இருக்கிற காரணத்தினாலேயே யாரையும் மதிக்காமல் எடுத்தெறிந்து பேசுவார்கள். ஆணவத்துடன் செயல்படுவார்கள். அவர்களின் நேர்மையின் மதிப்பை அவர்களின் ஆணவப்போக்கு குறைத்துவிடும்.

சமூக ஊடகம் என்ற ஒரு பொதுமேடை மக்களுக்குக் கிடைத்துவிட்டதால், தவறு செய்பவர்கள் அவர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் அவர்களைப்பற்றி மிகமிக மோசமாகவும் அநாகரிகமாகவும் மக்கள் விமரிசிக்கத் தொடங்கிவிட்டார்கள். அதுவும் நியாயம் இல்லை என்றாலும், அந்தத் தாக்குதலில் இருந்து தப்பித்துக்கொள்ள, உயர் அரசு பொறுப்பில் உள்ளவர்கள் அதிக விழிப்புடன் இருக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள்.

சில அதிகாரிகளின் பேச்சு மக்களை மிகவும் கவர்கிறது. இளைஞர்கள், அவர்களைத் தங்களின் வழிகாட்டிகளாக ஏற்றுக் கொள்கிறார்கள். பலர் வாயைத் திறந்தாலே வாங்கிக் கட்டிக் கொள்கிறார்கள். ஏன் இந்த வேறுபாடு. பதவி அவர்களைப் பண்படுத்தவில்லை என்று சொல்ல முடியாது. தங்களின் பதவியின் தன்மையை உணர்ந்து அவர்கள் தங்களைப் பண்படுத்திக்கொள்ளவில்லை. அதற்கு அவர்கள் கற்ற கல்வி துணை நிற்கவில்லை. மாறாக மிகப்பெரிய கனத்தை அவர்கள் தலைமீது ஏற்றி வைத்திருக்கிறது. அதை அவர்கள் இறக்கி வைத்தால் ஒழிய அவமானங்களிலிருந்து தப்ப முடியாது.

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானும் கெடும். (குறள்)



அபயக்குரல் கேட்டு விழித்துக்கொள்வோம்!

ஆங்கிலத்தில் 'Hue and Cry' என்று ஒரு சொற்றொடர் உண்டு. அதை 'அபயக்குரல்' என்று தமிழில் மொழி பெயர்க்கலாம். காவல்துறையில் இந்த சொற்றொடர், ஒரு நிலைய எல்லையில் நிகழ்ந்த குற்றத்தில் துப்புதுலக்க பிற பகுதியில் உள்ள நிலையத்தினருக்கும் தெரிவிக்க வேண்டிய கட்டாயம் இருந்தால் அப்படி அனுப்பும் அறிக்கைக்கு, 'Hue and Cry Notice' என்று சொல்வதுண்டு. இப்போது நிகழ்ந்துவரும் குற்றங்கள் மக்களையும் அவர்கள் சார்பாக அனைத்து ஊடகங் களையும் அபயக்குரல் எழுப்ப வைத்திருக்கிறது.

இதில் வருத்தபடவேண்டிய விஷயம் என்னவென்றால் ஒவ்வொருவரும் தம் பொறுப்பை மறந்து அடுத்தவரை சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் பெரும்பாலான கைகள் காவல்துறையையும், ஆளும் அரசையும் நோக்கி யிருக்கிறது.

உண்மை என்னவென்று இந்தக் கட்டுரை ஆசிரியரைப்போல், காவல் துறையில் 37 ஆண்டுகள் வெற்றிகரமாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களால்தான் சொல்லமுடியும். குற்றம் சுமத்தப் படுகின்ற அரசை முதன்மையாக எடுத்துக்கொண்டால், எந்த ஆளும் அரசுக்கும் தன்னுடைய ஆட்சியில் சட்டம் ஒழுங்கு கெட்டுப்போவதில் அல்லது தரம் குறைந்துபோவதில் உடன்பாடு இருக்கமுடியாது. அது அவர்களின் ஆட்சிக்கு உலைவைக்கும் விஷயம் என்பதும், எதிர்கட்சிகளின் மெல்லுகின்ற வாய்க்கு போடப்படுகின்ற அவல் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.



அபயக்குரல் கேட்டு விழித்துக்கொள்வோம்!

ஆங்கிலத்தில் 'Hue and Cry' என்று ஒரு சொற்றொடர் உண்டு. அதை 'அபயக்குரல்' என்று தமிழில் மொழி பெயர்க்கலாம். காவல்துறையில் இந்த சொற்றொடர், ஒரு நிலைய எல்லையில் நிகழ்ந்த குற்றத்தில் துப்புதுலக்க பிற பகுதியில் உள்ள நிலையத்தினருக்கும் தெரிவிக்க வேண்டிய கட்டாயம் இருந்தால் அப்படி அனுப்பும் அறிக்கைக்கு, 'Hue and Cry Notice' என்று சொல்வதுண்டு. இப்போது நிகழ்ந்துவரும் குற்றங்கள் மக்களையும் அவர்கள் சார்பாக அனைத்து ஊடகங் களையும் அபயக்குரல் எழுப்ப வைத்திருக்கிறது.

இதில் வருத்தபடவேண்டிய விஷயம் என்னவென்றால் ஒவ்வொருவரும் தம் பொறுப்பை மறந்து அடுத்தவரை சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் பெரும்பாலான கைகள் காவல்துறையையும், ஆளும் அரசையும் நோக்கி யிருக்கிறது.

உண்மை என்னவென்று இந்தக் கட்டுரை ஆசிரியரைப்போல், காவல் துறையில் 37 ஆண்டுகள் வெற்றிகரமாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களால்தான் சொல்லமுடியும். குற்றம் சுமத்தப் படுகின்ற அரசை முதன்மையாக எடுத்துக்கொண்டால், எந்த ஆளும் அரசுக்கும் தன்னுடைய ஆட்சியில் சட்டம் ஒழுங்கு கெட்டுப்போவதில் அல்லது தரம் குறைந்துபோவதில் உடன்பாடு இருக்கமுடியாது. அது அவர்களின் ஆட்சிக்கு உலைவைக்கும் விஷயம் என்பதும், எதிர்கட்சிகளின் மெல்லுகின்ற வாய்க்கு போடப்படுகின்ற அவல் என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

தன் கட்சிக்காரன் தவறு செய்துவிட்டோ அல்லது பாதிக்கப்பட்டோ காவல்நிலையத்தில் இருக்கும்போது, அந்தப் பகுதியில் முக்கிய பொறுப்பில் இருக்கும் அரசியல்வாதி, ஆதரவாகச் செல்வது, மக்களின் வாக்கை நம்பியிருக்கும் ஜனநாயக ஆட்சியில் தவிர்க்கமுடியாத ஒன்று. எதற்கு, எந்த அளவுக்கு தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள், அதற்கு காவல்நிலைய அதிகாரி எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயல்படுகிறார் என்பதைப் பொருத்துதான் அரசியல் தலையீட்டினால் சட்டம் - ஒழுங்கு கெடுகிறது என்று கூற முடியும்.

கட்டுரை ஆசிரியர், மூன்று பிரபல முதல்வர்கள, (எம்.ஜி.ஆர்., கலைஞர், மற்றும் அம்மா) ஆட்சிக் காலத்தில் காவல்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். மூன்று முதல்வர்களின் கையால் பரிசும், பாராட்டும் விருதுகளும் பெற்றவர். அவர்போன்று இந்தத் துறையில் பலர் பணியாற்றிச் சென்றிருக்கிறார்கள், பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள், பணியாற்ற வருவார்கள். வந்துதான் தீர வேண்டும். அவர்களால் மட்டும்தான் இந்தத் துறையில் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெறமுடியும். மக்களின் ஊக்கமும் ஒத்துழைப்பும் தான் அவர்களுக்கு உற்சாகமூட்டும் சக்தி. அவர்களுக்காகவாவது மக்கள் ஒட்டுமொத்தமாகக் காவல்துறையைக் குற்றம் சுமத்தாமல் தவறு செய்பவர்களை மட்டும் அடையாளம் காட்டவேண்டும். அதிகாரிகளும் அவர்களைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஒரு திறமையான, நேர்மையான அதிகாரியால் எந்த ஒரு தவறான தலையீட்டையும் உதறித் தள்ளிவிட்டு கடமையாற்ற முடியும். மேலும் கட்டுரை ஆசிரியரின் அனுபவத்தில் எந்த அரசியல்வாதியும் கொலை, கொள்ளை, பாலியல் பலாத்கார வழக்குகளில் தலையிட்டு, முக்கிய குற்றவாளியை வழக்கிலிருந்து விடுவிக்கும்படி சொல்ல இயலாது, சொன்னாலும் நடக்காது. ஒவ்வொரு வழக்கும் அந்த விசாரணை அதிகாரியின் திறமைக்கு விடுக்கப்படும் சவால். அப்படியிருக்கும்போது அவர் எந்த ஒரு தலையீட்டையும் அனுமதிக்க முடியாது, அனுமதிக்கமாட்டார். பின்னால் அந்த வழக்கு நீதிமன்ற விசாரணைக்கு வரும்போது சாட்சிக் கூண்டில் நின்று பதிலளிக்கப்போவது அந்த விசாரணை அதிகாரிதான். அந்த நீதிமன்ற அரங்கில் பலர் முன்னிலையில்

எதிர் வழக்கறிஞரின் கேள்விக்குப் பதிலளிக்க இயலாமல் தலைகுனிந்து நின்று அவமானப்படுவதை எந்த அதிகாரியும் விரும்பமாட்டார். அவ்வாறு பணத்துக்காக சுயமரியாதையை விட்டுக்கொடுப்பவன் ஒரு போலீஸ் அதிகாரியே அல்ல. இந்தத் துறையில் அவன் ஒரு கறுப்பு ஆடு. அவனை வைத்துக்கொண்டு மற்ற நல்ல அதிகாரிகளையும், ஒட்டுமொத்தமாகக் காவல் துறையையும் இழிவாகப் பேசுவது, காவல் துறைக்கும் அதிலிருக்கும் நல்ல அதிகாரிகளுக்கும் இழைக்கப்படும் அநீதி.

சின்னச்சின்ன சம்பவங்களைத் தொடர்ந்து, நிலையத்துக்கு வரும் புகார்களில் குற்றத்தைத் தடுக்கும் நோக்கத்துடன், அது பெரிதாக வளரும் வாய்ப்பை முறியடிக்கச் செய்யப்படும் விசாரணைக்காக சம்பந்தப்பட்டவர்களை நிலையத்துக்கு அழைத்து வரும்போது அரசியல் கட்சிக்காரர்கள் தலையிடுவது இயல்பு. ஆளும்கட்சி மட்டுமல்லாமல் எல்லாக் கட்சிக்காரர்களும் வரத்தான் செய்வார்கள். அவர்களின் துணையோடுகூட ஒரு காவல் அதிகாரி அந்தப் புகாரை, இரு தரப்பினரின் விருப்பத்தின் பேரில், எவ்வித வற்புறுத்தலும் இல்லாமல், சமாதானமாகத் தீர்த்து வைக்கும்போது ஒரு பகைமையின் வளர்ச்சி முளையிலேயே கிள்ளப்படுகிறது. இதுவும் காவல்துறையின் குற்றத்தடுப்பு நடவடிக்கை (Pro-active Policing - Preventive Measure) என்னும் முக்கிய பணிதான். இந்தப் பணியில் ஏற்படும் தொய்வுதான் பல பெரிய வன்முறைக் குற்றங்களுக்குக் காரணமாக அமைந்துள்ளது. இப்போதெல்லாம் காவல்துறையில் கீழ்மட்ட அலுவலர்கள் முறையாகப் பயன்படுத்தப்படாமல் அவர்களின் திறமை வீணடிக்கப்படுகிறது என்பதை ஒத்துக்கொண்டுதான் ஆகவேண்டும். ஒரு காவல் நிலையம் உதவி ஆய்வாளரின் பொறுப்பில் இயங்கிவந்த காலத்தில் நிலைய எழுத்தர் நிலையத்துக்கு வரும் புகார் மனுக்கள் அனைத்தையும் வாங்கி உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைப்பார். உதவி ஆய்வாளர் அவற்றைத் தலைமைக் காவலர் களுக்கு விசாரணைக்கு மேற்குறிப்பு செய்வார். தலைமைக் காவலர் புகாரின் தன்மைக்கேற்ப சம்பந்தப்படவர்களை ரோந்து செல்லும் காவலர் மூலமாக நிலையத்துக்கு வரச்செய்து விசாரணை செய்து, இரு தரப்பினரின் ஒப்புதல்படி சமதானமாகப் பிரச்சினையைத் தீர்த்துவைப்பார். தேவைப்பட்டால் சம்பவ இடத்துக்கே சென்று விசாரித்து முடிவு செய்வார். அல்லது

வழக்குப் பதிவு செய்யவேண்டியிருந்தால், உதவி ஆய்வாளரின் அனுமதியுடன் வழக்குப் பதிவுசெய்வார்.

தங்களின் மனு மீது விசாரணை துவங்கியதுமே சம்பந்தப் பட்டவர்களின் வேகம் தணிந்துவிடும். முடிவு இருவருக்கும் திருப்திகரமாகத்தான் இருக்கும்.

ஆனால் தற்போது நிலையப் பொறுப்பில் இருக்கும் உதவி ஆய்வாளரே மனுவை வாங்கிக்கொண்டு ரசீது கொடுக்கத் தயங்குகிறார். ஆய்வாளருக்கோ உயர் அதிகாரிகளின் அறிவுரைக் கூட்டம், பாதுகாப்புப்பணி, பணியிடைப் பயிற்சி, நீதிமன்ற அலுவல், தன் சொந்த அலுவலாக விடுப்பு மற்றும் அனுமதியில் செல்லும் நாட்கள், இரவு ரோந்து முடித்து செல்லும் ஓய்வு - இதெல்லம் போக இந்த மனுக்களை எத்தனை வந்துள்ளது என்று எண்ணிப் பார்க்கக்கூட நேரம் இருப்பதில்லை.

மேலும் இந்த நிலைக்கு காவல்துறையை மட்டுமே குற்றம் சொல்ல இயலாது. ஏனென்றால் இவ்வாறு கொடுக்கப்படும் மனுக்களில் பெரும்பாலும் உண்மை குறைவாகவும் மிகைப் படுத்தல் அதிகமாகவும் உள்ளது. அதனால் வரும் மனுக்கள் அனைத்தையுமே சந்தேகக் கண்ணோடு பார்க்கும் நிலைக்கு காவல்துறையினர் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக புகார் கொடுப்பவரிடம் அவர்கள் கேட்கும் கேள்விகள் பொதுமக்களை வெறுப்படையச் செய்கிறது. நிலையத்தில் உள்ள கீழ்மட்ட அலுவலர்கள் புகாரைப் பெறுவதில் தயக்கம் காட்டுகின்றனர்.

காவல் ஆய்வாளர் நிலையில் உள்ள ஒரு நிலையப் பொறுப்பு அதிகாரியால் அவர் எல்லைக்கு உட்பட்ட அனைத்துப் பகுதியிலும் உள்ளவர்களோடு தொடர்பு வைத்துக் கொண்டு அந்தப் பகுதி முழுவதையும் தன் கண்காணிப்பின்கீழ் கொண்டுவருவது மிகமிக அவசியம். ஆனல் அது நடைமுறை யில் அத்தனை சாத்தியமில்லை. இதற்கு அவர் தன்கீழ் பணிபுரியும் இரண்டாம்நிலைக் காவலர் வரை உள்ளவர்களை உரியமுறையில் முழுவதுமாகப் பயன்படுத்த வேண்டும்.

சமூகக் காவல் பணி: 'Community Policing' என்பதுதான் அந்த மிக உன்னதமான, பயனளிக்கக்கூடிய முறை. நம் நாட்டின் பிற மாநிலங்களிலும், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் போன்ற

பல வெளிநாடுகளிலும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி ஒரு காவல் நிலையத்தின் எல்லைக்கு உட்பட்டபகுதி, அந்த நிலயத்தில் பணியாற்றுகின்ற அனைத்து காவலர்களுக்கும் பிரித்து ஒதுக்கப்படும். அந்த பகுதியில் வசிப்பவர்களுக்கு அவர்தான் காவல்நிலையத்தின் மக்கள் தொடர்பு அலுவலர். அவர் அந்தப் பகுதிக்கு அலுவலாகச் செல்வதோடு மட்டுமல்லாது, மற்ற வேலைகளுக்கு இடையே கிடைக்கும் ஓய்வு நேரத்திலும் எப்போது வேண்டுமானாலும் செல்லலாம். அந்தப் பகுதியை அவர் வசதிக்கேற்ப பல சிறு பகுதிகளாகப் பிரித்து, தன்னார்வத் தொண்டர்கள், அந்தப் பகுதிவாழ் மக்கள் நலச்சங்கங்கள், ஓய்வுபெற்ற அரசு அலுவலர்கள், இளைஞர்கள், அந்தப் பகுதியிலேயே கடைபோட்டு வியாபாரம் செய்துகொண்டு இருப்பவர்கள் இவர்களின் பெயர் முகவரியுடன் தொலைபேசி எண்ணையும் வாங்கிக்கொண்டு, அவரது தொலைபேசி எண்ணைக் கொடுத்து வைத்திருந்தால். அவர்கள் மூலமாக அந்தப் பகுதியில் நடக்கும் சிறிய நிகழ்வுகள்கூட அந்தக் காவலரின் கவனத்துக்கு வந்துவிடும். அவர்கள் பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள காவலர் என்ற முறையில் அப்பகுதி மக்கள் அவரிடம் நட்பாகப் பழகித் தயங்காமல் தகவல்களைத் தருவார்கள். அவற்றை அவர் நிலையப் பொறுப்பு அதிகாரிக்கு தெரிவித்துத் தக்க நடவடிக்கை எடுக்கச் செய்யலாம். அந்தப் பகுதியில் ஆய்வாளர் நடத்தும் எந்த விசாரணைக்கும் அந்தக் காவலரின் அந்தப் பகுதி மக்களுடனான நல்லுறவு, பணியைச் சுலபமாக்கும். முழு ஒத்துழைப்பும் கிடைக்கும். அந்தக் காவலரின் நடமாட்டம் அந்தப் பகுதியில் ஒரு பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்துவ தோடு நிலையப் பொறுப்பு அதிகாரிக்குத் தெரியாமல் எந்த ஒரு சமூக விரோதச் செயலும் அந்தப் பகுதியில் துவங்கி, வளர்ந்து, பின்னால் மிகப்பெரிய அதிர்ச்சியையும், பரபரப்பையும், காவல்துறைக்குக் களங்கத்தையும் ஏற்படுத்த வாய்ப்பேயில்லை.

குற்றவாளிகளும், சமூகவிரோதிகளும் இந்தச் சமுதாயத் தில் கூட்டமாக வசிக்கும் மக்களிடையேதான் மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எங்கோ இருந்துகொண்டு எப்போதோ வரும் காவலர்களின் பார்வையிலிருந்து அவர்கள் தப்பிவிடலாம். ஆனால், அந்தப் பகுதியிலேயே உடன் வசிக்கும் மக்களிடமிருந்து தப்பமுடியாது. அதிகரித்துவரும் மக்கள் தொகை, வாகனப்பெருக்கம், தொலைத்தொடர்பு வசதி,

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி, ஆகியவை சமூக விரோதிகளுக்கும் உதவியாகத்தான் இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆகவே காவல் துறை பொதுமக்களின் ஒத்துழைப் புடன்கூட, சேர்ந்து செயல்பட்டாலொழிய குற்றங்களைத் தடுக்க முடியாது.

இத்தோடுகூட கண்காணிப்புக் கேமரா, தெரு விளக்குகள் ஆகியவற்றை பொருத்துதலும், அதிகப்படுத்துதலும் நிச்சயமாகக் குற்றங்களைக் குறைக்கும் என்று குற்றவியல் நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர். அவர்கள் கூறியுள்ள இரண்டு முக்கியக் கோட்பாடுகளில் ஒன்று, 'Broken Window Theory' (உடைந்த சன்னல் தத்துவம்); ஒரு வீட்டின் உடைந்துபோன சன்னல் பல நாட்களாகப் பழுதுபார்க்கப்படாமல் விடப்படுமேயானால் அந்தச் சன்னல் குற்றவாளிகளுக்கு விடும் அழைப்பாக அமையும் என்கிறார்கள்.

அடுத்தது 'Target Hardening' (இலக்கை கடினப்படுத்துதல்); ஏமாறுபவர்கள் என்ற இலக்குக்கு உள்ளானவர்கள், விழிப்புணர்வு பெற்றுத் தங்களைக் கடினமாக்கிக்கொண்டு விட்டால் ஏமாற்றுபவர்களின் பணி கடினமாகிவிடும்.

பள்ளியிலும், கல்லூரியிலும், அந்தப் பகுதிக் காவல் உயர் அதிகாரிகள் முதல்வர்கள் மூலமாக ஏற்பாடு செய்து விழிப்புணர்வு அளிக்கும் சொற்பொழிவுகளை நிகழ்த்தவேண்டும். அதன் மூலம் மாணவர்கள் தங்களின் தவறான செயல்களால் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கவேண்டும் என்ற எண்ணத்தைப் போக்கி, நற்செயல்கள் மூலம் எதிர்காலத்திற்கு அடித்தளம் அமைத்துக்கொள்ளத் தூண்டமுடியும்.

அவ்வாறு காவல் அதிகாரியுடன் நட்புடன் பழக ஆரம்பித்துவிட்டால் அவர்களால் அந்தப் பகுதிக் காவல் அதிகாரிக்கு பிரச்சினையே இருக்காது.

ஒரு கணவன் - மனைவி தகராறு, சிறிய கொடுக்கல் - வாங்கல் பிரச்சினை, தனிநபர் கருத்து வேறுபாடு பிரச்சினை, போன்ற எளிதில் தீர்த்து வைக்கக்கூடிய பிரச்சினைகளை, குற்றத்தடுப்பு என்ற முறையில் மனுவாக விசாரித்து தீர்த்து வைக்கும் திறமை ஒரு தலைமைக் காவலர் அல்லது ஒரு முதல்நிலைக் காவலருக்குகூட இருக்கிறது. அவர்களுக்கு அந்த

வாய்ப்பைக் கொடுக்காமல் அவர்களின் திறமையை வீணடிப்பதுடன் அவர்களின் மனதில் ஒரு பொறுப்பற்ற மந்த நிலையையும் உருவாக்குகிறோம். அவர்களின் இந்தப் பணி அப்பகுதி மக்களிடையே ஒரு நெருக்கத்தையும், நட்பையும் ஏற்படுத்தும். பணியின் மீது பற்றும் உற்சாகமும் ஏற்படும். அப்படிச் செய்கின்ற செயலுக்கு 'கட்டப் பஞ்சாயத்து' என்று பெயர் சூட்டுவது தவறு. எவ்வித அதிகாரமும், யாருடைய கட்டுப்பாட்டிலும், யாரும் தட்டிக்கேட்க முடியாத ஒருவர் தன் விருப்பத்திற்காகவும், சுயலாபத்துக்காகவும் செய்வதுதான் கட்டப் பஞ்சாயத்தாக இருக்க முடியுமே தவிர, உயர் அதிகாரிகளின் மேற்பார்வையில் செயல்படுகின்ற ஒரு அரசு அலுவலரின் நோக்கம் பிரச்சினை பெரிதாக வளரக்கூடாது என்பதாகத்தான் இருக்க முடியும்.

சிவில் தகராறுகளில் காவல்துறை தலையிடக்கூடாது என்பது ஒரு நல்ல கட்டுப்பாடுதான். ஆனால், அது பல சந்தர்ப்பங்களில் தவறானவர்களால் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தப்படுகிறது. துணிவில்லாத காவல் அதிகாரிகள் தங்கள் கடமையைத் தட்டிக்கழிக்கப் பயன்படுத்துகிறார்கள். ஒரு சொத்தின் உரிமை குறித்தான பிரச்சினையில் தலையிட்டு முடிவு சொல்லும் உரிமை காவல் துறைக்கு இல்லை. ஆனல் ஒருவரது அனுபத்தில் உள்ள இடத்தில் எவ்வித சம்பந்தமும் இல்லாதவர் ஆக்கிரமிப்பு செய்வதைத் தடுக்க சட்டம் இருக்கிறது. உள்ளநிலையை அப்படியே நிலைநிறுத்தி (Maintaining 'Status Quo') சம்பந்தப்பட்டவர்களை நீதிமன்றத்திற்கு போகச்சொல்லும் அதிகாரமும் உள்ளது.

பல பகைமைகள் தங்களைத் தீர்த்துவைக்கும் நல்ல மனிதருக்காகக் காத்துக்கொண்டிருக்கிறது, ஏங்கிக்கொண்டிருக்கிறது என்று கூடச் சொல்லலாம். சம்மந்தப்பட்டவர்கள் தாங்களாகவே சென்று சமாதானம் பேச அவர்களின் சுயகௌரவம் (Ego) இடம் கொடுப்பதில்லை. தங்களின் பகைமையைத் தீர்த்துவைக்கும் நல்ல உள்ளத்துக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் பலவீனமான பகைமைகளை காவல் நிலையமே தலையிட்டுத் தீர்த்துவைப்பதன் மூலம் பல வழக்குகள் பதிவாவதைத் தடுக்கமுடியும். கீழ்மட்டத்தில் உள்ளவர்கள் கையூட்டு பெற்றுக்கொண்டு தவறு செய்துவிடுவார்கள் என்ற சந்தேகத்தில் அவர்களின் செயல்பாடு தடுக்கப்பட்டு அவர்களின்

திறமை வீணடிக்கப்படுவது நியாயமில்லை. இது அவர்களின் திறமைக்கு இழைக்கப்படும் அநீதி. அதனைக் கண்காணித்து தவறு நடக்காமல் பார்த்துக்கொள்வதுதான் உயர் அதிகாரிகளின் கடமை, பணி. அதனைச் செய்யாமல் மக்களிடையே பகைமையை வளரவிடுவது, பின்னால் மிகப்பெரிய கலவரமாக வெடிக்க வாய்ப்பிருக்கிறது. சமாதானத்தை வேண்டி நிலையத்தை நோக்கி வரும் நல்லவர்களைக் கவனிக்கத் தவறிவிட்டால் அவர்கள் சேராத இடம் சேர்ந்து வஞ்சத்தில் வீழ்ந்துவிடும் ஆபத்து உள்ளது. அப்படி உருவானவைதான் தாதாக்கள் ஆதிக்கமும், கூலிப்படைகளின் கொட்டமும். பெரும்பாலான கொலைகளுக்கு தனிப்பட்ட விரோதம்தான் காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. அதே நேரத்தில் குறித்தக் காலத்தில் யாரேனும் தலையிட்டு அந்த விரோதத்தைத் தீர்த்துவைத்திருந்தால் அந்தக் கொலை தடுக்கப்பட்டிருக்கும் என்பதும் உண்மை. ஏன் அந்த நற்பணியை காவல்துறை செய்யக்கூடாது. 'குற்றத்தடுப்பு' என்ற முறையில் அதுவும் காவலர் பணிகளில், கடமைகளில் ஒன்றுதான். ஒரு தனி மனிதன் தாதாவாக, கொடூரமான 'ரௌடி'யாக வளருவதற்குக் காரணம் நாமில்லை என்று அந்தப் பகுதிமக்களும், காவல்துறையும் பொறுப்பைத் தட்டிக்கழிக்க முடியாது. இரு சாராருக்கும் பொறுப்பிருக்கிறது.

இந்நிலையில் காவல் துறையின் பணி நடைமுறை பற்றி இன்னொன்றையும் இங்கு குறிப்பிட்டாகவேண்டும். இப்போதெல்லாம் காவல்நிலையப் பொறுப்பதிகாரி முதல் காவலர்வரை நிலைய எல்லைக்குள் பெரும்பாலான நேரம் இருக்க அனுமதிக்கப்படுவதில்லை. ஏதேனும் ஒரு அரசியல் கட்சி, சாதி சார்ந்த இயக்கம், சமூகநல இயக்கங்கள்ஆகியவை ஏதேனும் ஒரு காரணத்தைக் காட்டி நடத்தும் போராட்டங் களுக்கு பாதுகாப்புப்பணிக்குச் சென்றுவிடுகிறார்கள். இந்த இயக்கங்களின் நோக்கம் பெரும்பாலும் தங்களின் இயக்கத்தை பிரபலப்படுத்திக்கொள்வதாகத்தான் இருக்கிறது. ஒரு திரைப்படத்தின் பெயர், அதில்வரும் வசன வரிகள், அல்லது பாடல் வரிகள், எங்கோ ஒரு கட்சித்தலைவர் வாய்தவறிக் கொட்டிவிட்ட வார்த்தைகள், என்று எதையும் விட்டு வைப்பதில்லை. இவர்கள், கன்னியாகுமரியில் நடந்த ஒரு நிகழ்வு பத்திரிக்கையில் செய்தியாக வந்ததைப் படித்துவிட்டு, உண்மையில் நடந்தது என்ன என்று தெரியாமலேயே அதுக்கு